உ

ஓம் :

சத்திக்கணபதி துணை

கணநாத சிஷ்யன் **M. S.** ஆதிமூலன்

இயற்றிய

அருட்குமர பஜணாமிர்தம்



ஸ்ரீ பாலசுப்பிரமணியர்

விலை அணா 4)

(விலை சதம் 25

உ

ஓம்:

ஸ்ரீ ஜெயசத்திவேல் துணை.

வித்துவாமிசர்கள் புகழ் பெற்றோங்கும் முத்தமிழ் க்ஷேத்திரமென விளங்கும் மதுரையம்பதியைச் சார்ந்ததும் ஸ்ரீராஜராஜேஸ்வர நாகநாத சேது பதி அவர்கள் ஆளுகை நகருமாகிய இராம நாதபுரம் ஜில்லா காளுகொத்தான் நெற்புகப்பட்டியில் வசிக்கும்

கணநாத சிஷ்யன்

M. S. ஆதிமூலன்

இயற்றிய

அருட்குமர பஜனமிர்தம்

நமது

மன்னர்பெருமானாகிய மேன்மை தங்கிய ஐந்தாம் ஜார்ஜ் மகிபர் அவர்களின் இருபத்தைந்தாம் ஆண்டின் வெள்ளிவிழாதினமான 1935ம் வருடம் மேமாதம் 6-ஆம் திகதியில் இக்கீதத்தைப் பூர்த்திசெய்யக் கருதியும் எனது பிரார்த்தனையை அன்போடு ஏற்றுக்கொண்டு ஜூபிலி வருட ஞாபகார்த்தமாக வெளியிடச் செய்த சர்வவல்லமையையுடைய சற்குருவான ஸ்ரீ ஜெயகணநாதன் திருவுளவன்பினாலும் இக்கீர்த்தனையை வெளியிடலாயிற்று.

கொழும்பு செல்வீதி, 44-ம் நெம்பர் ராபர்ட் பிரஸில் பதிப்பிக்கப்பெற்றது.

விலை அணா 4.] 1935. [விலை சதம் 25.

உ

சிவமயம்

திருச்சிராப்பள்ளி ஜில்லா முசிரித்தாலுகா

ஆனைக்கல்ப்பதி ஜோதிடம்

பழனிவேல் நாயனாரவர்கள்

இயற்றிய

சாற்றுக்கவி

கற்பகவமுதாள் வள்ளிகாதலன் குமரவேளின்
அற்புதக்கீர்த்தனத்தை அறிந்தவரொருங்குசேர்த்து
நெற்புகபதி சுப்பையா நெடுந்தபத்தாதி மூலன்
பற்பல பாவதாகப் பகர்ந்துரை செய்தான் மன்னோ

இதுவுமது

வள்ளிநாயகியை வேட்டல் மகிழ்ந்திடு வடிவேற்கந்தன்
தெள்ளிசைக் கீர்த்தனத்தை ஜெகத்துளோரகத்துளேற்ப
வள்ளல் நெற்புகரூர்சுப்பு மரபினிலாதி மூலன்
உள்ள செந்தமிழ்ப்பாவாக உகந்த முதூட்டினனே

சுபம்.

உ

ஓம்

சத்திக்கணபதி துணை

கருத்துரை.

அகவல்.


ஞான கணேசன் நலந்தரும் யோகன்
தீனதயாளன் திருவுளக்கருணையால்
பற்பலபாக்கள் பாரினிலனேகம்
விற்பன விவேகர் வேண்டியே செய்துளார்
அத்தகையோர்கள் முன் அறிவினிற் சிறியேன்
மத்தகயானை முன் வாழ்சிறு அணிலென
அருட்குமரபஜ னாமிர்தமென்னவே
மருப்பினாற் பாரதம் வரைந்தவனருளினால்
பூவிலிக் கீதம் புகன்றிடுங்கருத்தை
யாவருமறிய நவிலுதல் நன்மையாம்
தந்தையா யென்னைத் தரணியிலீன்றோர்
முந்தவினையினால் மோசமாங்கொடியநோய்
துன்பஞ் செய் மேகம் தொடர்ந்ததாலனேகம்
நம்பிடும் ஔஷதம் நல்கியும் முன்வினை
பற்றியே சூழ்ந்து பரிதாப நிலைமையாய்
உற்றதோரவயவம் உருசில்குறைந்துமே
காணமென்மேலும் கலங்கி என்மாதா
வேணதோ ரௌஷதம் வேண்டிடும் போதினில்
நீணிலத்தாசையை நீக்கியென் தந்தையும்
காணவே அரிதாய் கடுகியே மறைந்தனர்
அன்னையா யென்னை அன்புடனீன்றோர்
பின்னமில்லா தெனைப் பேணிடும் நாளினில்
தந்தைநோயென்னைச் சாருமோ வென்று
நொந்தவென்தாயும் நோய்வந்தாலதற்கு
உய்வ தெவ்வகையில் உண்டெனவருந்தி
செய்வதறியாமல் திகைத்தனராயினும்
சிறுவனாமெனது செவிக்கதுபுகன்றிடில்
வருந்துவான் சுதனென வழுத்திடாதிருந்துமே
வேழமாமுகவனை வேண்டியே அந்நோய்
பாலனை யண்டிடாப் பாரமுன்னுடையதே
ஆமெனக்கருதியே அன்னையுந் தேறினர்
பூமண்டலத்தினிற் புகழ்சில மானிடர்
தாதைநோய் தனயனைச் சாருமென்றெனதுளம்
வாதனையாகவே வழுத்தினர்பலவிதம்

திருவுளச் செயலிதா தெய்வகடாக்ஷமா
கருணைசெய் கடவுளே காசினி மீதினில்
வகையறியேனொரு மருந்து நீயேஎன
மிகவே வருந்தினும் வெளிக்கதுபுகன்றிடா
திருந்திடும்நாளதில் ஜெயசத்திவேலவன்
அருந்திட ஔஷதம் அருளியவாறு போல்
ராமையா வென்னுமோர் நண்பர் சோதிடருடன்
நேமமாய் சிற்சில நீத சங்கீதமாய்
வார்த்தைகளாடியே மகிழுமோர் நாளினில்
கார்த்திகேயன்றன் கருணையை விளக்கியே
முருகனிடமென் முறைசொல்வாய் கிளிஎன
வரைந்திடுங் கீர்த்தன மகிமையும் வரைந்தவர்
அருட்பெறும் உறுதியால் அகன்றிட்டபிணியதும்
விருப்பமாயோதினர் வேலவனருளினால்
காதினிற்கொண்ட என் கருத்திற் புகுந்தன
கீதமுறையதாற் செடிமிகுதசக் கிரீவன்
வாதனை யகன்றதாய் வழுத்தியமேலவர்
காதையின் மகிமையும் காருண்யக் கடவுளின்
திருவுளப் பெருமையாற் சிந்தையிலுதித்தன
கருணைதானிதுவெனக் கருத்தினி லெண்ணியே
சீர்தரும் ஐங்கரன் திருவடி மகிமையை
பாரினிற்சிறியேன் பதித்து என்மனத்தினில்
வரைந்திடுங் கீத மலர்ப்பத பூஜையால்
நிறைந்தெங்கணுமருள் நின்மலன் சேயனும்
முத்துவிநாயகன் முதலவ னருளினால்
பற்றிடாதந் நோய் பறந்துமே ஓடின
இக்கருத்துடனே இயற்றிய நூலிதை
பக்குவமாகவே பாருளோர் நேசிக்க
அச்சுவாகனத்தி லமர்த்தியே உலாவிட
இச்சையாய்ச் செய்திட எண்ணினேனாயினும்
பொருளுடன் முயற்சியும் போதாக்குறையினால்
வருடங்களாயின வரைந்த நூலிதனை
பிரார்த்தனையாகவே பிரசுரம் செய்திட
கார்த்திகேயனின் கருணையால் மறுதரம்
திருத்திடும் போதிலென் ஜெனன ஜாதகத்தின்
கருத்தையறிந்த கணித சோதிடர்கள்
சந்தான விருத்திக்கு தடங்கலாய் நிற்கின்ற
பந்தவினை யெனும் பாம்பதின் தோஷமும்
விலகும்படிக்கொரு விதபரிகாரமும்
நலமுடன் செய்வது நன்மையாமென்றனர்
தொல்லை ஈ நகற்றியே துறவறமேகு முன்
இல்லறவாழ்விலே ஈடுபட்டதினால்

III

சர்ப்பமாந்தோஷத்தின் சஞ்சலம் நீங்கவும்
சற்குண முள குல தனயனை ஈயவும்
கங்கையைச்சடையிலும் கழுத்தினிலரவமும்
மங்கள முடனணி மகேசுரன் புதல்வனும்
வெற்றிவேல் தாங்கிய வேலவன் சோதரன்
முத்தியளித்திடும் மூஷிகவாகனன்
சிந்துவைவதைத்திட்ட செல்வக்கணேசனின்
சுந்தரப்பாதமே துணையென எனதுளம்
தன்னிலேஐங்கரன் தந்தருளுறுதியால்
இன்னிலம் துதிபெய ரிசையவே அமைத்துளேன்
கோரியவாறு என் குறையது நீங்கவும்
பாரியைதனக்குமெப் படியுளதோஷமும்
நீங்கியேநலந்தர நின்மலன் கிருபையால்
பாங்குடன்மரபது பாரினில் விளங்கவே
சற்குணமொடுகுல தனயன் தீர்காயுளாய்
அற்புத ஐங்கரன் அருளுவதுண்மையாம்
பிரார்த்தனையாயிதை பிரசுரம் செய்தனம்
பார்த்திடும் யாவரும் பாலவர் மற்றுளோர்
புலவர்கள் முன்பொரு புல்லறிவோனிசை
பலபிழை பொறுத்துமே பாதுகாத்தருளுவீர்
பங்கையாசனன் தன் பாரியாள் நாவினில்
இங்கிதமாகவே இருந்திடப் போற்றினேன்
பாவை இகழாது பாடுவதன் பதாம்
யாவரும கேட்டிதை நலம்பெறும் பக்தியால்
கூர்வடிவேலவன் குணமுள்ள சோதரன்
பாரதை யளந்திட்ட பச்சைமால் மருகனும்
உமையவள் மகிழ்ந்திட உலகினிற்சுதனென
அமையவேவந்தநல் அங்குச பாணியாம்
எண்ணியபடியே இதயத்தில் நின்று
கண்ணியமருளும் கணநாதனருளினால்
பாவங்கள் நீங்கிப் பாரினிலன் பொடு
யாவரும் மகிழ்வாய் நலம்பெற்று வாழ்குவர்

M. S. ஆதிமூலன்



ஸ்ரீ முத்துவிநாயகர்

உ
ஓம்:
சத்திக்கணபதி துணை
வெற்றிவேல் ஸஹாயம்

கணநாதசிஷ்யன் M. S. ஆதிமூலன்

இயற்றிய

அருட்குமர பஜனாமிர்தம்.

விநாயகர் துதி

வெண்பா

பாதிமதியணிந்தோன் பாலகனாய்வந்துதித்த
ஜோதிச்சுடரொளியே தும்பிமுகா ஆதி
மூலப்பொருளே என்முன் வந்துகாத்தருளச்
சாலத்துதித்தேனுன்றாள்.

இதுவுமது

தித்திக்குஞ்செங்கரும்பும் செவ்விள நீர்தேன் விரும்பும்
சத்திக்கணபதியுன்றாள் சரணம் பக்தியுள
கீர்த்தனப்பாயானுரைக்கக் கீர்வாணிநாவிருக்கச்
சேர்த்தருளென்னிருதயம் சேர்.

3

(சோமசுந்தரனே-என்ற மெட்டில் பின்மகுடம்)

இராகம்,—பூரிகல்யாணி. தாளம்—ரூபகம்.

பல்லவி

ஆகுவாகனனே எனை
ஆதரியே ஜோதிநீயே (ஆகு)

(பல்லவி தொடர்பு)

ஆதிகணநாதா உந்தன் பாதமதைநீதானருள் (ஆகு)
அந்தரிதுரந்தரியின் மைந்தனேவரந்தருவாய் (ஆகு)

ஐங்கராஇங் குராய்வந்தனம்
துங்கனேகுஞ் சராதந்தனம் (ஆகு)

அருளோங்கிடத் துதிகீர்த்தனம்
வரமீய்ந்திட இதுநற்றினம் (ஆகு)

அநுபல்லவி

மாகலையுணர்ந்தநாதா வல்லபைசமேதாநீதா
ஆகமமுணர்ந்தவேதா
அண்டினேனே தொண்டன்நானே (ஆகு)

சரணங்கள்

மாங்கனிக்காய்தந்தைதனை வலம்புரிந்தசுந்தரனே
தீங்கனைத்தும் நீங்கச்செய்தே
தினம்வந்துன தருள்காட்டுவாய்
கனசங்கட வினையோட்டுவாய் (ஆகு)

பாரதம்வரைந்தையா பக்தியாயுன்
பதமலர்துதித்தேன் நான்மெய்யா
சீர்தரத் தருணம்ஐயா
சிவனார்மனமகிழுஞ்சுத னிவனேஎனப்புவிமீதினில்
சீலமாபுதித்தாயாதி மூலனேதுதித்தேன்நீதி (ஆகு)

4

(கதனகுதூ-என்ற மெட்டு)

இராகம்,—கதனகுதூகலம். தாளம் ஆதி.

பல்லவி

கணநாதனே கலிதீரும்வேதா
கருணாகரனே காருந்தற்பரனே (கண)

அநுபல்லவி

குணரூபனே குஞ்சரமுகனே
கொஞ்சிடும்சதங்கை குலுங்குமைங்கரனே (கண)

சரணம்

சங்கரன் சுதனே சதா நம்பினேனே
மங்கள நீதனே மகிழ்ந்தா வேதனே
ஐங்கரா பாதம் அண்டினேன் நீதம்
ஆதிமூலன் கீதம் ஆதரி பிரதாபா (கண)

(முடுகு)

காரணமாகிய ஞானசிகாமணி
வாரணமாமுகா வல்பிணியைத்துணி
காரத்தொருமருப்பாற் பாரதமெழுதிய
கரியுனதிருபதம் சிறுவனுக்கருள்நிதம் (கண)

5 (ரஞ்சிதஞ் சேர்வஞ்சி திரு-என்ற மெட்டு)

இராகம்,—செஞ்சுருட்டி. தாளம்—சாப்பு.

சிந்து

குஞ்சரமுகவழகும் செஞ்சதங்கையினொலியும்
கொஞ்சிடவருவாயென்முன் ஐங்கராநிதம்
கெஞ்சினேன்பதமருளும் சிங்காரா யான்

கோரிடும்வரம் தாருமென்சிரம்
கூப்பினேன்கரம் காப்பதுன்பாரம்

கூர்வடிவேல்கொண்டவனின் சோதரா என்
குற்றமேயகற்றிடும் தயாபரா (குஞ்)

அந்தரத்தமரர்களைச் சிந்துவெனும்ராக்ஷஸன்செய்
அக்கிரமமடக்கவந்த புண்ணியாமுன்னம்
விக்கினவினைதானகற்றும் கண்ணியா உயர்

ஆலமுண்டநன் னீலகண்டனின்
பாலனென்றுமுன் ஞாலேவந்தனை

ஆதிமூலன்கீதமோங்கும் சுந்தரா ஒரு
பாதிமதியேயணிந்தோன் மைந்தாவா (குஞ்)

6 (தினந்திருக் கல்யாண மஹத்துவ என்ற மெட்டு)

இராகம்,—செஞ்சுருட்டி. தாளம்—ஆதி)

பல்லவி

மூஷிகவாகன மீதிலமர்ந்திடு
மோதகப்பிரியாகண
மூர்த்தியேஸ்தோத்திரந்தாதா முத்திக்குவித்தாய்
முந்திமுளைத்திடும் வேதா (மூஷிக.

அநுபல்லவி

மூந்தனேவந்தனம் மைந்தனேதந்தனம்
மூலாதாரப்பொருளே
முன்வந்துபாசுரம் தாதா ஜெகப்புகழும்
மூலக்கணபதி நாதா (மூஷிக)

மூவுலகும்புகழ் பாவலருமகிழ்
மோக்ஷசாம்பிராஜ்யமருள்
முருகனருமைச் சோதரா துதிக்கிரங்கி
முன்வந்துகாத்தருள் தீரா (மூஷிக)

முத்திக்கெனுமோர் வித்தெனும்வேதா
சத்திக்கணபதி வல்லபைநாதா
மூத்தோனேவாரும் ஐங்கரா, பாவுக்குகந்து
முன்வினைதீரும் சிங்காரா (மூஷிக)

சரணம்

ஜெயந்தாவுன திரு திருவடிதேட
சீர்தருவாய்தினம் வல்வினையோட
நயந்தாவுனதடி நன்மலர்சூட
நவிலாதிமூலன்சொற் கீதமேபாட
நானிலமீதிற்கொண்டாட நின்புகழ்பாட
நலமேதா நாளும்கைகூட (மூஷிக)

7

(கதனகுதூ-என்ற மெட்டு)

இராகம்,—கதனகுதூகலம். தாளம்—ஆதி.

பல்லவி

துதிதாகீதா சுபகணநாதா
சுகுணபாதமே தொழுதேன்சதமே (துதி)

அநுபல்லவி

பதிமோகிதா பணிந்தேன்சதா
பாருங்கண்ஐங்கரா பார்வதிகுமரா (துதி)

சரணம்

சிந்தைதனில்யானே தெரிசித்தேன்கோனே
வந்தருள்சீமானே வரந்தாபூமானே
கந்தனின்சோதரா காருண்யாகெம்பீரா
காலசூலன்பாலா காருமாதிமூலா (துதி)

(முடுகு)

கங்கையணிந்திடு சங்கரன்மைந்தனே
வெண்கரிமாமுகா ஐங்கரனேசுகா
காதலாயோதிடும் ஆதிமூலன்கீதம்
தீதிலாதருள்புரி ·வேததயாநிதி (துதி)

8



சரஸ்வதி துதி.

கலித்துறை

அலையதனிற்றுயின் றெழுவோன்றன் மகனுயவதரித்த அயனின்பாரி
பலகலைகளேயுரைக்கப் பாவாணர் நாவதனில்பண்பாய் நின்று
நலமருளும் நன்மணியே வெண்ணிறமே நாயேனின் துதிக்கிரங்கும்
கலைவாணிசரஸ்வதி என்னுவிலிருந்தென்னாளும் காப்பாய் போற்றி.

9

(தொழிலோன்றலை-என்ற மெட்டு)

இராகம்,—மத்தியமாவதி. தாளம்—ஆதி.

பல்லவி

வருவாயிது தருணமெனது நாவில்
வாணிசரஸ்வதியே வரமருள (வரு)

அநுபல்லவி

தருவாயுன தழகிய பூம்பதம்
தண்டமிழ் கலைவாணி யாழ்பாணி (வரு)

சரணங்கள்

கமலாசன மீதிலமர்ந்தோன்பாரி
காருண்கிருபா கரியே ஆதரியே கம
தமிழாலனு தினந்துதி செய்திடும்
தனயனை ஆதரியே உபகாரியே (வரு)

திருவேதிரு வுருவே நின்னருள்கீதம்
சிறியேனெனக்கருள்வாய் கீர்வாணி திரு
பரலோகமே தருஞ்சங்கீதமுறையை
பாலனுதிமூலனுக்கருள் பாவாணி (வரு)

10 (தும்பிக்கைச் செம்பொற்றூண்-என்ற மெட்டு)

இராகம்,—இந்துஸ்தான் தோடி. தாளம்—சாப்பு.

பல்லவி

அன்புடன் நீ தயைசெய்வாய்
நம்பினேன் நாவினிலுய்வாய் (அன்)

அநுபல்லவி

அம்புவி போற்றுந்தாயே
ஆதரிப்பாய் நானுன்சேயே
நம்பினே னருள்செய்வாயே
நாவில் வா வா பூவில் காவா (அன்)

அன்னவாகனத் தமர்ந்தான்
அரிய திருவுரு வரைந்தான்
மன்னனுயுனக் கமைந்தான்
மாலின் பாலன் சீலன் றேழி (அன்)

மாதுருவாய் நீ பிறந்தாய்
மானில மெங்கும் நிறைந்தாய்
ஆதிமூலன் றமிழ்க்குகந்தாய்
அம்பாள் வந்தா ளன்றுள் தந்தாள் (அன்)

11

சிவபெருமான் துதி.

விருத்தம்

மான்மழு கரத்தே ஏந்திமதுரித மொழியாள் கொஞ்சத்
தேனமர் கைலைமேவும்சிவ பெருமானே போற்றி
ஆனைமாமுகனும் சொந்த அருட்குகன் தந்தையேநல்
ஞானமாங் கலைகள்யாவும் நலமுடனருள்வாய் போற்றி.

12

(காளைமீதில் வேளைவா-என்ற மெட்டு)

இராகம்,—தோடி. தாளம்—ரூபகம்.

பல்லவி

சோமசுந்தரேசா உனது தூயபாதம் தா (சோம)



சிவபெருமான்

அநுபல்லவி

கீத ஸ்தோத்திரம் செய்திடும் கீர்த்தனம் ஏற்றிடும்
சுகுண பொற்பாதா (சோம)

சரணம்

துதிசெயுமடியவர் பவவினையகலவே
கதியருள் தவபோதா
சுந்தரம் நிறைந்த அந்தரத்தமரர்
துதித்திடும் நந்நீதா
ஜோதிசின்மயமே ஆதிமூலன்றமிழ்
நீதிலாதருள்தாதா
நீதிலாதருள்தாதா
நீதிலாதருள்தாதா நீதா (சோம

13

அம்பிகை துதி.

கலித்துறை

நீங்காதபக்தி நிறைந்திடுந்தொண்டர்கள் நெஞ்சமதில்
பாங்காகநின்று பவவினையறுத்திடும் பார்வதியே
தீங்கான யாவுமகற்றி என்னுளும் சிறப்பருளப்
பாங்காக எந்தனிதயத்தில் நின்றருள் பாலிப்பையே.

14

(பஞ்சாக்ஷர-என்ற மெட்டு)

இராகம்,—கரகரப்பிரியா. தாளம்—ஆதி

பல்லவி

மாதாநீவா மலர்ப்பாத சேவைதா (மாதா)

அநுபல்லவி

மழலை சொற் கீதம்
மகிழ்வாயுன திரு செவியது கொள (மாதா)

சரணங்கள்

பூதலம்யாவும் புகழ்பெறமேவும்
பூம்பதந்தந்தாளும்
பொன்மீனம்பிகா நன்மையே தந்துகா (மாதா)

பஜனுதுதிசெய் பாலனுதிமூலன்
பக்திக்கிரங்கிடும்
பதமலரதுதுதி நிதமெனக் கருள்ததி (மாதா)

சேவைசெய் பக்தரில் சிறியேன் அறியேன்
தேன்கமழ் அம்பிகா
ஜெகம்புகழீஸ்வரி ஹரியின் சோதரி (மாதா)

15

(தொழிலோன்றலே-என்ற மெட்டு)

இராகம்,—மத்தியமாவதி. தாளம்—ஆதி.

பல்லவி

மதுராபுரி வளர்திருநவமணி
வாலமீனும்பிகையே மனோகரியே (மது)

அநுபல்லவி

கதிரோங்கிய பதிவளமேவிடும்
காருண்யரூபவதி வருவாய்ததி (மது)

சரணங்கள்

சுடரேஜெக ஜோதிபிரகாசரூபி
சுகுணமனோன்மணியே சிகாமணியே சுட
விடைமீதேறும் வேயின்சேயனின்பாரி
வேண்டினேன் பூம்பதமே யான்நிதமே (மது)

அலைமேற்றுயில் ஆனந்தன்சோதரி
அருள்தரத் தருணம்கதி புகழும் துதி அலை
நலமேதர நவிலுமாதிமூலன்
நற்றமிழ் சிறக்கத்ததி மகிழும் நிதி (மது)

16

வீரையா துதி.

இராகம்,—இந்துஸ்தான் தோடி. தாளம்— ஆதி.

பல்லவி

சிவனார் சினத் துதித்ததீரா அஷ்ட
திக்கெஜங் களும்நடுங்க
தக்கனகந் தையொடுங்க (சிவ)



மஹா விஷ்ணு

அநுபல்லவி

அவனியதிற்கொடிய அக்கிரமவேள்வி
அமைத்திட்ட தக்கன்சிரம் அறுத்திடமேவி
கவனமாய் முனிந்திடும் தந்தைமுன் கூவி
கண்டவர் நடுங்க வீரனென்று பெயர்கொண்டுதாவி (சிவ)

சரணம்

மாமேகவர்ண மிதுவென்னும் மேனி ஜொலிக்க
மாரகத கிரீடமதுமின்னும் கண்டோர் துதிக்க
சீமானைக்கொன்ற நரசிம்மம் உரித்த தோலுன்
திருமேனி உத்தரீயம் நண்ணும் புலியின் றோலும்

நேமமுடனே இடையிற் சோமனெனும்
கச்சையாகக் கட்டி அஷ்ட நாகங்கள்
சாமியுந்தன் மாலையென நீலவர்ண
ஆலவட்டஞ்சூட்டி ஐராவதமும்

வாமனமு மாங்குமுதம் புண்டரீக
மஞ்சனமும் கூட்டி புட்பதந்தமும்
நாமமுள சார்வபௌமம் சுப்பிரதீபம்
காதிலணிபூட்டி கெர்ஜிக்கும் வீரா

காக்கப்பிணி யகற்றி ஜெயந்தர வாராய்
காதல ஞதிமூலன் கீதவொய்யாரா
தீர்க்க வயதொடுநல் சேயனைத் தாராய்
ஜெகத்தில் வீரையனென மதிக்கும் கெம்பீரா (சிவ)

17

ஹரிதுதி.

(மயிலே பழனி என்ற மெட்டு)

இராகம்,—ஸ்ரீ. தாளம்—ஆதி.

பல்லவி

ஹரியே துணைவா
அலையாழி சூழ் கார் வண்ணா (ஹரி)

அநுபல்லவி

கரியே கதற முன்னம்
காத்து ரக்ஷித்திட்ட (ஹரி)


சரணங்கள்

கோதண்டா வீராதீரா வாதண்டைக்காலோன்றேழா
நீதுண்டத சுக்கிரீவன்சிரம்
சிதைந்தேவீழ துணிந்தாய்தாழ (ஹரி)

அன்பான தேவிமங்கைக் கிலைந்தாய் முன்னாலிலங்கை
கண்பாரும் நீலமேகனே
கடலினிற்றுயின் றெழுந்திடுயோகனே (ஹரி)

வந்தாள இதுதகி நாதா நந்தாகோவிந்தனே நீதா
தந்தாளாதிமூலன் சங்கீதா
சாற்றிடத்துதி ஏற்றிடத்தகி (ஹரி)

18



மகாலெட்சுமி துதி.


(மஞ்சுளிகர் குந்தள மின்னே-என்ற மெட்டு)

இராகம்,—செஞ்சுருட்டி. தாளம்—ஆதி.

சிந்து

ஆழிசூழி லங்கையையாண்ட
குபேரனென்னும் மாபில்வந்து
அந்தராவணனையே வென்றோன்
ஆதிசேஷன்றன் மீதிலமர்ந்து
பூதலந்தனை ஆடிகொண்ட
அரவணைச் செல்வனும் மகிழ
அனுமந்தன் அஞ்சலி கொண்டிட
அவதரித்தாய் தேவர் புகழ (ஆழி)

அரியின்திரு மார்பில் நிதமும்
அன்பதுகொண்டு அமர்ந்து நின்றுமே
ஆனந்த ரூபமாயுலவும்
அஷ்டலெட்சுமி அன்பாயிரக்ஷணம்



ஸ்ரீ முத்துவிநாயகர்

கஷ்டம் நீக்கியே காக்க வந்திடும்
ஆதிமூலன் கீதபூஜையே
அமிர்தமாகக் கருதியுள்ளமே
அன்புடன் தருவாய் சேவையே (ஆழி)

19

ஆஞ்சநேய துதி.

(வா வா கார்த்திகா-என்ற மெட்டு)

இராகம்,—இந்துஸ்தான் தோடி. தாளம் ஆதி.

பல்லவி

கா வா மாருதி எழு
கடலை அதிவிரைவாய்
திடமாய்க்கடந்த தீரா (காவா)

அநுபல்லவி

பாவியால் சீதை பதைத்திடும்போதே
பதமே பணிந்து தைரியம்
பகர்ந்து நின்றவா புகழனுமந்தா வா (காவா)

சரணம்

வா அனுமந்தா வாயுவின் மைந்தா
வரைந்திடும் கீர்த்தனந்தனில்
வாதுகள் வராதகற்றி ஆதிமூலன் கீதம்நத்தி (காவா)

20

குமரவேள் துதி

ஆசிரிய விருத்தம்

பன்னிரு கரத்திலே ஓர்கரம் நீட்டி என்
பவவினையறுத்தாளுவாய்
பாலாபிஷேகனே மேலான யோகனே
பார்வதியினருள் சேயனே
சன்னிதானத்திலே நாடோறு முன்துதி
தனயன் யான்செய்யவறியேன்
தலமதறியேனுனது நலமதறியேனருளும்
சண்முகக்கருணையறியேன்

உன்னிருபதத்திலே வேணதாம்புட்பவகை
உகந்து சமர்ப்பிக்க வறியேன்
ஓதரிய வேதனே நீதமருள் போதனே
உமையவடன்னருள் பாலனே
என்னிருதயத்திலே நின்றுநீ குடிகொள்ள
இதுததி மயிலில் வருவாய்
ஈசனருள் பாலனே சூரகுல காலனே
எனையாளும் வடிவேலனே.

21

(காக்ஷி கண்காக்ஷியே-என்ற மெட்டில் மகுடம்)

இராகம்,—கமாஸ். தாளம்—ஆதி.

பல்லவி

ஓம் சரஹணபவா கீர்த்தனப்புகழ் பிரதாபா
ஓம் சரஹணபவா (ஓம்)

(பல்லவி தொடர்பு)

உத்தமி புத்திரா புத்திதாமித்திரா (ஓம்)
உலகே புகழும் தலமே மகிழும்
மலைமான் மகளும் மயலே திகழும் (ஓம்)
ஓங்கி வளர்ந்திடு கதிரினிற் குருபரா
தீங்கினை யோட்டிடச் சிகியினில் வருகுவாய் (ஓம்)
உலகுக்கொரு பெரு சிவனுக்கு பதேசம்
புகழுக்கோதிய ஏழுகுப்பதி வளர் (ஓம்)
உடம்பினிற் பிணி கடம்பனே துணி
திடம்பெறப்பணி இடந்தர அணி (ஓம்)

அநுபல்லவி

வாஞ்சையுடன் யான் சிறுவன்
தான்செயும் பணிக் கருள் செய் (ஓம்)

சரணம்

தீஞ் சொற்குயில் கூவி வாழும் செந்தில் வளர்பூபதி
தேடு மாதிமூலன் கீதம் நாடிட இது ததி
பாஞ்ச சன்யமேந்தும் கரன் பக்ஷம் வை தயாநிதி
பாடிடுந் தொண்டர்கள் கோடா கோடி நிதம் உன்துதி.

Digitized by Roja Muthiah Research Library

பாவை குற வள்ளி மணவாளா
பாலனுக் கிரங்கும் நீதயாளா
சேவை ஏற்பாய் பூமலரின் தாளா
ஜெயமே தருவாய் பன்னிருதோளா

சிகியில்வர நேர் நேர்
சிறுவனைக் கண்பார் பார்
மகிமை சேர்வேல் கூர் கூர்
மலர்க் கரந்தனிற் சீர்சீர்

குருபரா (ஓம்)

22

காங்கேயன் சாக்ஷிதரும்-என்ற மெட்டு

இராகம்,—பியாக். தாளம்—ஆதி.

பல்லவி

கார்த்திகைத் தீபப்பிரகா சா கருணைதா
காரும் விஸ்வாசா (கார்)

அநுபல்லவி

போற்றினேன் பூம்பதம் தாதா
புரவலர் பூஜிக்கும் பாதா (கார்)

தொகையறா

கதிரையம்பதிதனில் மதுரிதம் பொழிகின்ற
கருணையங் கடலமுதமே
ஆதி பெறுந்தொண்டர்கள் கோடான கோடிநின்
சுகுண மருள் பொற்பாதமே

(அநுபல்லவி எடுப்பு)

ஸ்தோத்திரம் கேளும் ஒய்யாரா
சிறுவனை ஆளும் அதிதீரா (கார்)

தொகையறா

மதுர மொழியுமையாடன் அருமையுள மைந்தனே
மயில் மீதமர்ந்தகுகனே
வனவேடன் மகளால்முன் கிழவேடமே கொண்ட
மகிமைசேர் ஆறுமுகனே.

சரணம்

வரந்தரும் மாது மகிழ் சீலா
ஆதிமூலன் கீதம் புகழ் வேலா வர
துரந்தரா தூயசெம்பிரா
கதிரை வாழ் சுகுணவொய்யாரா (கார்)

23

(அரஹரா அரஹரா-என்ற மெட்டு.)

இராகம்,—பியாக். ஏகதாளச் சாப்பு

பல்லவி

மயிலில்வா மயிலில்வா
வாலை மீனாள் சு தாவா (மயி)

பல்லவி தொடர்பு

மனமோகன விஜயா அருள்
சிகிவாகன ஜெயமேதர (மயி)

கதிர்மாமலைப் பதிவேலவா
துதியே தினம் கதியே தர (மயி)

அநுபல்லவி

அயில்பிடிக்குஞ் சேவலா ஆறுபடைக் காவலா
அண்டிடுந் தொண்டர்துய ரகற்றிடச் செய்வேலவா (மயி)

சரணங்கள்

துதிக்குமாதிமூலன் மதிக்கத் துந்துமிமுழங்கவே
சூரபத்மனை வதைத்த சொந்தவேல் துலங்கவே

சுடரின் ஜோதியே அருளும் நீதியே
சொந்தா புகழ் கந்தா மகிழ்
வந்தாள் குகா உன்றுள் தர (மயி)

கார்த்திகைப் பெண்ணாறு வர்மனக்களிப்பதனைக் கண்டவா
கானக்குறவள்ளி முன்னம் வேங்கை யுருக்கொண்டவா

காருங்கண்ணியனே வாரும் புண்ணியனே
கருணாகர நிதியே திருக்
கழுகாசல பதியே அருள்

கந்தனே சந்ததம்
சொந்தமு டன்தர (மயி)

24

(ஸுஜனஜீவனா-என்ற மெட்டு)

இராகம்,—கமாஸ். தாளம்—ரூபகம்,

பல்லவி

மயிலின் வாகனா குற
மாது மோகனா வேலா (மயி)

அநுபல்லவி

அயிலின் சோதனா அரன் அருமைப்போதனா
அம்பிகை சுதா சம்பிரம குகா நம்பினேன் யோகா வேலா (மயி)

சரணங்கள்

பார்த்திடத்துதி ஏற்றிடத்தகு பழனியம்பதி
பஞ்சாக்ஷர மந்திராக்ஷரா பரங்கிரிக்குமரா வேலா (மயி)

விபரஞ் சாற்றுவாய் கன்ம வினைநோய் மாற்றுவாய்
வேலனே ஆதி மூலனின்கித வித்வசிரோன்மணி வேலா (மயி)

25

(பாலாபிஷேகப் பழனிமலை-என்ற மெட்டு)

இராகம்,—பியாக். ஏகதாளச்—சாப்பு.

பல்லவி

தேனாபிஷேகத் தெரிசனம் தந்திடும்
செந்திற்குமார குருசரணம் (தேனா)

அநுபல்லவி

மானீன்றவள்ளிக்காய் கானகமே சென்ற
வள்ளல் பதமே தாத்தருணம் (தேனா)

தொகையறா

கானகந்தன்னிலே வேங்கைமரமானவா
கரிமுகன்றன் சோதரா
கலாபமயிலேறியே உலாவிவரும் வேலவா
காக்ஷிதந்தருள் குருபரா

(முடுகு)

கழலிணை பதமலர் கனிந்துநீ தருவாய்
மழலைசொற்காய் மனம் மகிழ்ந்துநீ வருவாய்

(முன் அநுபல்லவி எடுப்பு)

காஷிதர இது தருணம் வா கந்தா
கண்ணன்மருகனே அம்பிகை மைந்தா (தேன)

தொஹையரா

ஆலாலமுண்டோன்றன் பாலனெனவந்தவா
அனந்தசயனன் மருகனே
ஆனந்தரூபனே ஐங்கரன்சிநேகனே
அம்மையுமையாள் புதல்வனே

(முடுகு)

அருள்தர இது ததி சரஹணபவனே
ஐங்கரன் சோதரா சங்கரன் மகனே

(முன் அநுபல்லவி எடுப்பு)

ஆடிடுந்தாண்டவன் அருமைப் புதல்வா
ஆதிமூலன்றமி ழுக்கருள் தருவாய் (தேன)

26

(ஐயா பழனி மலை—என்ற மெட்டில் பின்முடுகு)

இராகம்,—ஸஹானு தாளம் ஆதி

கண்ணிகள்

ஆலமுண்ட கண்ட சிவன் பாலா முன்
அமரர் சிறை தவிர்த்த வேலா

அந்தரி துரந்தரி மைந்தா
கந்தனே சந்ததம் வந்தாள்

அப்பா குமாரகுரு பரனே வெற்றி
அயிலேந்தும் பன்னிருகரனே (ஆல)

தேவா சிறந்த மயில்வாகா உனைத்
தேடிப் பணிந்தேன் தவயோகா

தித்திக்குந்தினை மாவினையுண்டவா
சத்திக்குமொரு சுதனாய் வந்தவா

தேனே தெள்ளமுதமே வாவா சிறு
சேயனின் தீமைதைக் காவா (ஆல)

சிற்றின்பத்தாலே மதிகெட்டு நாளும்
சிந்தைதனையலைய விட்டு

தெரிசனை செய்யா சிறுபிழை பொறுப்பாய்
சிறுவனை யாளவிரைவில் வாசிறப்பாய்.

தேனபிஷேகா செந்தூர் வாசா வள்ளி
தெய்வானை மாதுமகிழ் நேசா (ஆல)

நாவாற்றுதித்தேன் அரிமருகா உனை
நம்பு மடியேனைக் காரும் முருகா

நந்திடுமாதி மூலனின் கீதா
பக்திக்கிரங்கிடும் பரமனின்போதா

நாயேன் துதிக்கருள் செய்நீதா இந்த
நானிலம் புகழும் மலர்ப் பாதா (ஆல)

27

(ஸ்ரீ ராமபாதமா-என்ற மெட்டு)

இராகம்— ஜயந்தஸ்ரீ தாளம் ஆதி

பல்லவி

வா வடி வேலனே வள்ளி மணாளனே

அநுபல்லவி

வா வா மாதுமை பாலனே (வா)

சரணங்கள்

பூபதி கார்த்திகா பூம்பதம் சேவைதா
பூர்வ ஜென்ம கன்ம நோயது போக்கிடுங்குகனே வா (வா)
ஆனையின் சோதரா அறுமுக குருபரா
ஆலமுண்டோன் பாலா ஆதி மூலன் பூஜித்தேன் வா (வா)

28

வேல் துதி

விருத்தம்

கற்பக வனத்தோன் சேயைக் களித்துள மணமேகொண்டு
பற்பல தொண்டர் போற்றப் பழனிமா மலையில் மேவி
தற்பர குருவாயோங்கும் சண்முகக் கடவுளோன்றன்
பொற்புறு கரத்துவேலைப் போற்றுவ தெனக்குவேலை.

29 (நெஞ்சே சம்சாரம் நிலையா—என்ற மெட்டில் பின் மருடம்)

இராகம்,—பியாக் தாளம் ஆதி

பல்லவி

வேலா நின்பாதம் துணையே சிகி
மீதமர் வாகா (வேலா)

அநுபல்லவி

சூலாயுதனருள் சுதனெனச் சிறந்தாய்
துந்துமிவாத்தியம் முழங்கிட நிறைந்தாய்
மாலான வள்ளியை மணந்திட நினைந்தாய்
மாங்கனிக்காகவே மயிலினிற் பறந்தாய் (வேலா)

சரணங்கள்

விண்ணவர் போற்றிடும் கண்ணனின் மருகா
வேணும் வரந்தரத் தருணம்வா முருகா
அண்ணலே உனதிரு அருட்பதந்தருவாய்
ஆகுவாகனனுக் கான சோதரனே
மோகமாக வள்ளி முன்னே சென்றவனே (வேலா)

தந்தைக் குப்பிரணவம் தன்னை நீயுரைத்தாய்
தைபலின்மையலால் தன்னுருமறைத்தாய்
அந்தமான உன தருளெங்கும் நிறைத்தாய்
அந்தரியீன்ற மைந்தா கந்தா
சொந்தமாகத் தந்தாளுனருள் (வேலா)

தேன் தினை மாவுண்ணும் சீர் வடிவேலா
சேவலங் கொடியது துலங்கிடும் மேலா
பாந்தமுடன் கடைக்கண் பாரனுகூலா
பாலனுதி மூலன்துதி
மேலாகச் செய் சீலா இத்ததி
பக்தியின் மேலா நத்தினேன் வேலா
சத்தியின் பாலா வித்தை தா சீலா (வேலா)

30 (குமரனையே பாடி என்ற மெட்டு)

இராகம்,—செஞ்சுருட்டி தாளம்—**ஆதி.**

பல்லவி

மயில் மீதிலே விரைவாய்
வந்தாளுவாய் சேவலா (மயில்)

அநுபல்லவி

கைலைவளரும் நாதன் கருத்துக்கினிய சேயா
கணபதி சோதரனே கருணை தருவாய் நேயா (மயில்)

தொகையறா

கதிரையம்பதிமேவும் கானவனவேடனே
கலியுகவரப்பிரசாதா
காதலுடனன்னுளில் மாதவளின் மையலால்
களவுருவெடுத்தநீதா

(அநுபல்லவி எடுப்பு)

கந்தாகருணைகரா கார்த்திகைத்திருக்குமரா
காதலனுதிமூலன் கருத்து துதிக்கிறபக்தர் (மயில்)

31

(மஜதேத்தே ஐங்கியாயா-என்ற மெட்டு)

இராகம்,—இந்துஸ்தான்பியாக் தாளம்—**ஆதி.**

பல்லவி

தேவா-வா வா மயில் வீரா சிவன்
மைந்தா வரந்தா நேராய் (தேவா)

அநுபல்லவி

தேவா செந்தூர்க் கந்தா தெய்
வானை மாதுக் குகந்தா
காவா பார்வதிமைந்தா அருள்
கண்ணன் மருகா வந்தாள் (தேவா)

சரணங்கள்

வனத்தில் மாறுருக்கொண்டு குற
மாதவளொருத்தியைக் கண்டு
கனத்திற் கேலிகள் விண்டு உயர்
தருமணம் செய்தனை நன்று (தேவா)

சேவற் கொடியது திகழ பல
தேசத்தில் தொண்டர்கள் புகழ
பாவை குறமகள் மகிழ தாய்
பார்வதிவேல் கார்த்திகழ (தேவா)

பறவையின் மீதேறுங்குகனே முன்
பவவினை தீர் குருபரனே
முருகனே பன்னிரு கரனே ஆதி
மூலனைக் காருந்தற்பரனே (தேவா)

32

(நீலமேகவண்ணம் என்ற மெட்டு)

இராகம்,—செஞ்சுருட்டி. தாளம்—சாப்பு

சிந்து.

சுந்தர பொற்பதம் தந்திடுவாய் நிதம்
துய்யனேமுரு கையனேஅருள் மெய்யனேவளர்
சோலைசூழும் கதிர் மாமலை மேவிய
சொந்தனே சிவன் மைந்தனே

புள்ளிமயில் மீது துள்ளி விளையாடும்
பூபதிபத மேகதிவரு வாய்ததி முன்னம்
பூவைவள்ளிக்காக மாவனமே சென்ற
பூம்பதம் அருள் வாய்சதம்

வளையல் சுமந்தங்கு மாறுருவத்தோடு
வந்தவாமையல் கொண்டவாமுன்பு நின்றவா அந்த
மாதுவள்ளி தந்த மாவினையுட்கொண்ட
மாயனே சம்பிர் தாயனே

பாரினிலேதொண்டர் கோரும் வரந்தரும்
பார்த்திபாதிருக் கார்த்திகாகுரு மூர்த்திவா சிறு
பாலனாதிமூலன் நாளுந்துதியுமை
பாலகா சத்தி வேலவா

33 (ஆரம்பம் ஆரம்பம்-என்ற மெட்டு)

இராகம்,— இந்துஸ்தான் பியாக். தாளம்—சாப்பு.

பல்லவி

பேரின்பம் பேரின்பம் பேரின்பமே தவப்
பேரின்பம் பேரின்பம் பேரின்பமே

அநுபல்லவி

பேரின்பம் சடாக்ஷரமே பெற்றிடும் மஹத்துவமே (பேரி)

சரணங்கள்

நாரதரன்புடன் வீணையைமீட்டி
நரம்புகளாலிசை ராகப்பண்கூட்டி
சீர்தாரக்கந்தன் செயலதைக்காட்டி
சிறப்புடன்பாடியே சென்றிடும்பேட்டி (பேரி)

சேகண்டிசங்கு முழங்கிடும்நாதம்
செவிக்கினிதே தரும்மந்திரகீதம்
வாகனமாமயில் வணங்கிடும்வேதம்
மந்திரம்தந்தைக் கருளியபோதம் (பேரி)

பாரினிற்கந்தன் பதந்தனைத்தேடி
பாடிடுந்தொண்டர்க ளோவெகுகோடி
கூறுமாதிமூலன் கீதத்தைப்பாடி
குன்றில்வளர் குமரனடி
நன்றுநன்று என்றுபாடி (பேரி

34 (கதனகுதூ-என்ற மெட்டு)

இராகம்,—கதனகுதூகலம். தாளம்—ஆதி.

அநுபல்லவி எடுப்பு

அயில்சேவலா அருள்தாதாவேலா
ஐங்கரன்மகிழும் சங்கரன்புதல்வா (மயி)

பல்லவி

மயில்வாகனா வள்ளிமோகனா
வாரணன்சோதரா வருவாய்செந்தூரா (மயி)

சரணம்

கந்தனே உன்றனைக் கருதி இவ்வேளை
சொந்தமுடன் நாளும் துதித்தேன் வந்தாளும்
சந்ததம் பாதம் தந்திடும் நீதம்
தையலாள் மகிழ்வேலா சதாசிவன்றன் பாலா (மயி)

(முடுகு)

மாமலைமீதினி லேவளர் குருபர
வேலனே சேயாதி மூலனும் போற்றிட
மரகதமயிலினில் வருஅறுமுககுக
திருபதமலரிணைச் சிறுவனுக் கருளுக (மயி)

35

வெற்றிவேல் துதி

விருத்தம்

திங்களைச்சடையில் வைத்தோன் சேயனையவதரித்து
மங்களமாகவெங்கும் வணங்கிடும் பக்தர்கோடி
தங்கிடும்ஸப்ரகமுவ தனில்வளர் கந்தவேளின்
மங்களவெற்றிவேலை வணங்குவ தெனக்குவேலை

36

(பாலராமனையனே-என்ற மெட்டில் மகுடம்)

இராகம்,—இந்துஸ்தான் தோடி. தாளம்—ரூபகம்.

பல்லவி

வேலாயுதா சண்முகா உனை
வேண்டிப் பணிந்திட்டோம்
ஆண்டருள்வாய் சதா (வேலா)

(பல்லவி தொடர்பு)

வித்வசிரோன்மணி மைந்தா
நத்தினேனுன்பதம் தந்தாள் (வேலா)

விநாயக மூர்த்தியின் தம்பி
சேயனைக்காத்திடும் நம்பி (வேலா)

விகசிதமயில்மிசை வருகுக
அகபுளகிதமொழி புகலுக (வேலா)

விளைந்திடும் தொண்டர்கள் வல்வினை
களைந்திடும் கந்தனே நீதுணை (வேலா)

அநுபல்லவி

சீலமுடனே உன் சீர்பதந்தேடி
சேவிக்குந் தொண்டர்க ளோ வெகுகோடி
மாலயனைச் சிறை வைத்தாய் வாதாடி
மந்திரம் செய்தவா தந்தை செவிநாடி (வேலா)

(பல்லவி எடுப்பு)

விரைந்துமுன்கானில் சென்றாய் அங்கு
வேடரூபங் கொண்டாய்
ஆடம்பரக் கந்தா விரை

(அநுபல்லவி எடுப்பு)

பறந்திடுமாமயில் ஏறிடும் ஜோதி
பாடிடுந் தொண்டர்க ளின்புறும்நீதி
விரைந்து வர இது தருணம் வாகியாதி
மேலெனும் பதமருளாதி
மூலனின்துதி புகழ்நீதி (வேலா)

37

(தேவாதிதேவா ஜெய-என்ற மெட்டு)

இராகம்—பியாக் தாளம்—ஏகம்

கண்ணிகள்

ஆலமுண்டோன் சேயா அழகுள்ளவா.
ஆதிமூலன் கீதம் புகழ் வல்லவா
பாலசுப்பிரமண்யனே நல்லவா
பக்திரசத்துதிக் கருள் வல்லவா (ஆல)

தேவா ஜெயங்கொண்ட செந்தூர் வாசா
தேடிடுந்தொண்டர்க் கருமை நேசா
நாவாற்றுதித்தேன் வரந்தா ஈசா
நானில மெங்கும் புகழும் நேசா (ஆல)

தேவகுஞ்சரி மகிழும் லோலா
செந்திற் பதியிற் புகழும் வேலா
மாவனந்தேடியே வந்த சீலா
மாதுமையாள் மகிழ்கின்ற லோலா (ஆல)

வேங்கை மரமான பூபதியே
வினைமுற்றும் நீக்க இதுததியே
தேன்கனியோங்கும் திகழ் பதியே
ஜெய ஜெய அருள்தர வாததியே (ஆல)

38

(கற்பூர தீபாராதனையே-என்ற மெட்டு)

இராகம்—மத்தியமாவதி தாளம்—ஆதி

பல்லவி

பூம்பதந்தருவாய் சேவலா திரு
பொற்பதமதுகதி இத்தறிைாதுதி (பூம்)

அநுபல்லவி

நான்பணிந்திட வரம் நல்கிடும் வேலா
நங்கை வள்ளியின்மனம் மகிழ்ந்திடும் லோலா (பூம்)

சரணங்கள்

தீபப்பிரகாசஜோதி ஜெகமேபுகழும் கியாதி
மாபுகழ்தரும் நீதி
வாராய் கண்பாராய் கலிதீராய்
மாது மனோகரா வேத குருபரா
கீத முறையருள் தீன தயாபரா (பூம்)

ஞானவொளியே உன்றன் நலந்தா வரப்பிரசாதா
மோனமருளுமாதி மூலன் கீதப்பிரதாபா
முன்பாய் வா அன்பாய் நீ என்பால்
முக்கனிசர்க்கரை போதகமுண்டிடு
சற்குணஜங்கரன் தம்பியே உனதிரு (பூம்)

39

(வேகமயிலேறும் வேலா-என்ற மெட்டு)

இராகம்—இந்துஸ்தான் தோடி தாளம்—ஆதி

பல்லவி

கானமயிலேறி வா வா கடம்பாகுகா கந்தா
கடம்பாகுகா கந்தா கடம்பாகுகா (கான)

அநுபல்லவி

தீன தயாளா தெரிசித்தேன் வேலா (கான)

தொஹையரா

தேஜபிஷேகனே திருச்செந்தூர்வேலனே
சேவலங்கொடியினேனே
தினைமாவைவள்ளிஇரு கரமீய வுண்டவா
திரிசூலனருள்பாலனே

(முடுகு)

திங்களணிந்திடு சங்கரன் மைந்தா
மங்களமெங்கும் முழங்கிடுங் கந்தா

(பல்லவி எடுப்பு)

சிலாபதந்தா ஆதி
மூலன்கீதமே நீதி (கான)

40

(ஜெயஜோடஜ சொரூபா-என்ற மெட்டு)

இராகம்—ஸஹானா தாளம்—ஆதி

பல்லவி

சிகிவாகனமகிபா தங்க
ஜெகஜோதி சொரூபா மரகத (சிகி)

அநுபல்லவி

புகழேதரும் பூபதிகுகா அருள்
புண்ணியாதவப்
போதா நீதா வேதா சொர்ண (சிகி)

சரணம்

அரிமால்மரு மகனேகுமரா உன்றன்
அருளே தருவாயே
முருகாகுகா முன்னோன் சோதரா நிதம்
முன்வந்து ஆதி
மூலன் கீதம் காருங்கந்தா (சிகி)

41

மயில் துதி.

ஆசிரிய விருத்தம்

தந்திமுகனருளினால் சகிராகுதோஷமும்
தானகல அருள்செய் மயிலே
சற்குணம் நிறைந்தகுல புத்திரன்நிறை ஆயுளுடன்
தானருளும் ஞானமயிலே
சந்தோஷமாகவே சிந்தூரவதனனை
தாங்கிநின்றிடும் மயிலே
சாஸ்திரமுறையாயெனது தோஷமது நீக்கிட
சக்திஇலையருள் செய்மயிலே
கொந்தாரும் பூங்குழல் வள்ளிதெய்வானை மகிழ்
குழந்தை வடிவேலின் மயிலே
கோபாலன்மருகனும் சூரகுலகாலனும்
குமரகுரு ஏறும் மயிலே
சந்தானமே தரும் சர்வவிக்கினேசுரன்
தனைச்சுமந்தமர் செய் மயிலே
தருணமிது எனதுபிணி வினையகல தந்திசெவி
சாற்றும் நமஸ்காரம் மயிலே

42

மயில்தூது துதி.

(மயிலே நீ போய்ச் சொல்லிவா-என்ற மெட்டு)

இராகம்—அடாணா தாளம்—ஆதி

பல்லவி

மயிலே என்தூது சொல்லுவாய் உயர்
மாமலை மீதினில் வளர் சோமசுந்தரன் சேயிடம் (மயி)

அநுபல்லவி

மயலால் மயங்கி நின்று
வாடிடும் பாலனென்று
தயவே கொடுநீ என்று
சாற்றுமென்குறை கண்டு

தங்கமயிலே குறை
சாற்றும் மயிலே காப்
பாற்றும் மயிலே
சர்ப்பாபரணன் சேய்காதில் (மயி)

சரணம்

பொல்லாங்கெனும் நோயென்று
போற்றுமென் துதி கண்டு
எல்லாந்தவிர்ப்பா யென்று
இறக்கைவிரித்தா டுன்றன்
இதமொழி கண்டு பாலன்
துதியும் உட்கொண்டு வேலன்
வருகையே நன்று
இலங்கிடும் பன் னிருசெவியதிலுற
கலங்கிடும் ஆதி மூலனின்புற (மயி)

43

முருகனிடமென் முறை சொல்வாய் கிளியே-என்ற மெட்டு

இராகம்—கமாஸ் தாளம் ரூபகம்

பல்லவி

கணேசனிடமென் கருத்துரை மயிலே
மயிலே மயிலே (கணே)

பல்லவி தொடர்பு

தேவ கணங்கள்பதி உளங் குளிர
வணங்குதுதி நயங்கள்பெற (கணே)

கண்ட எந்தன் தந்தை பிணி
என்று மெனை அண்டிடாமற் (கணே)

கலகலவென சதங்கையும்பிர
பல மொடுபதந் துலங்கிடுசெல்வ (கணே)

காதல் மதியாலேசிறு போதிலே அறிவிழந்த
தீதுபல தீரும்படி ஓதினதாய் ஞானமொழி (கணே)

கத்துமாதி மூலனுக்கு குற்றமான ராகுதோஷம்
பற்றிடாம லோட்டிக் குலபுத்திரனை நல்குமென (கணே)

கல்விக்கொரு களஞ்சியமெனும்
செல்வப்பொரு ளது மிகத்தரும் (கணே)

அநுபல்லவி

அனுதினமும் துதி செய்திடுந் தொண்டரில்
அன்பனொரு ஏழை நம்பினேனென்று சொல்
உனையே நான் தூதா யுரைத்திடு மன்பதால்
உகந்துமுன்னுளம் மகிழ்ந்து சென்று நீ
நயந்து நின்று முன் (கணே)

சரணம்

செல்வக்கதிர்மலை சேவற் கொடிவேலன்
சித்த மறிய வுரைப்பது முன்பாரம்
நல்குஞ்சுதனுக்கு நற்குணம் தீர்க்காயுள்
நலமேதர நீயே உரை
நயந்தேன் பணிந்தேன்

நத்து மேழை எந்தனுக்கு
எத்தொழிலும் விருத்தியாக
நன்று செய்வா யென்று மனங்
கொண்டுமே புகன்றுனென (கணே)

44

(திருப்புகழெங்கும்-என்ற மெட்டு)

இராகம்—பைரவி தாளம்—ஆதி

பல்லவி

ஜொலித்திடும் தங்கஸ் தூவிக்குமரா
சூலாயுதன் பாலாவடி வேலாசெஞ் சேவலா (ஜொ)

அநுபல்லவி

கோழிக்கொடியோனே குன்றார் பதியோனே
கோமானே சீமானே பூமானே வாரதி (ஜொ)

சரணங்கள்

காவடியலங்காரா கருணைதா செந்தூரா
காரார் அருள் தாராய்மதி கூராய்அதி தீரா (ஜொ)

ஆதரிப்பாய் நீதா ஆதிமூலன் கீதா
அண்டினேன் தொண்டன்நான் தெண்டாயுதா ததி (ஜொ)

45 சத்திவேல் துதி.

விருத்தம்.

அறமறைப் பொருளாயெங்கும் அந்தரத்தமரர் தேவர்
குருபரனெனவே போற்றக் குழந்தையின் வடிவமாகி
பெருமை சேர்தடாகமீதிற் பிரபலமாகநின்றோன்
பொருமைகொள் சத்திவேலைப் போற்றுவதெனக்குவேலை.

46 (கண்ணாயிரம் படைத்த—என்ற மெட்டு)

இராகம்—செஞ்சுருட்டி தாளம்—ஆதி

சிந்து.

வேலே துணையென என்னாளும் வணங்குமென்முன்
விரைவினில் வந்துமென்குறையையகற்றிடும் வெற்றிவேல் துயர்
தருபிணியாவையும் துரிதமாயோட்டிடும் சத்திவேல் (வே)

சிற்றின்பத்தாலே மதி கெட்டேவிளைத்துக்கொண்ட
தீங்கெனும்வாத பித்தசிலேஷ்மப் போரதால் வரும்
ஜென்மப்பிணியது தன்னைத்துணியுமுன் கூரதால் (வே)

சத்திமகன்றன்னிடம் வெற்றி கொடுத்துநிதம்
சந்தனகுங்குமச் செங்கரமதனில் தங்கும்வேல் வந்து
சாலவுமாதி மூலனைக்காத்திடும் தங்கவேல் (வே)

47 (அன்பே உமைப்பிரிந்தேனே—என்ற மெட்டு)

இராகம்—ஸஹானா தாளம்—ஆதி

பல்லவி

கருணை செய்வாய் லோலா கதிர்காமவடிவேலா (கரு)

அநுபல்லவி

முருகாபன்னிருதோளா முகுந்தன்மருகாவந்தாளாய் (கரு)

சரணங்கள்

திருப்பரங்குன்றோனே தேவ தேவர்கள் பணிவோனே
விருப்பமாயுனைத்தானே யான் வேண்டியே பணிந்தேனே (கரு)

ஆதிமூலன்கீதா உன் அருள்தரும் மெய்ப்பாதா
பாதமே கெதி நீதா உனைப் பணிந்தேனே பொற்பாதா (கரு)

48 வாழ்த்து.

(காளைமீதில்வேளைவா—என்ற மெட்டு)

இராகம்—தோடி தாளம்—ரூபகம்

பல்லவி

ஐந்தாம் ஜார்ஜும் மேரி ராணி அவனிவாழ்கவே (ஐந்)

அநுபல்லவி

உயர் அம்புவிமன்னர்களின்பமாயாவரும் சம்பிரமமாய்வாழ்க(ஜந்)

சரணங்கள்

அம்புவியோர்களுட் செந்தமிழ்வாழ்கவும் அரசருக்கிப்பூவில்
அதிபதிபட்ட மாகியுமிருபத் தைந்தாவது ஆண்டில்
ஆயிரத்தொளாயிர மைந்தேழாண்டில்மே ஆறில் ஜூபிலியில்
ஆருமாம்ஞாபக மைங்கரனருளினு லாதிமூலன்துதியில்
அருட்குமரபஜ னுமிர்தம்நிறைந்தன அழகாயிதையச்சில்
அமைத்திடும்ராபர்ட் பிரஸதுவாழ்க அறநெறியும்வாழ்க
அறநெறியும்வாழ்க குருபதமும்வாழ்க வாழ்க (ஜந்)

49

கலித்துறை.

பாரினிலே பாவலரும் யாவர்களும் அருட்குமர பஜனுமிர்தம்
சீருடனே பாடிடுவோர் கேட்டிடுவோர் திருத்தினோர் சிறப்பித்தோரும்
பூரணமாய்ராக சுதிதாளமது செய்தோரும் புவியோரெல்லாம்
நேர்மையுளகணநாதன் சோதரன்றன்னருள்பெற்று நீடூழிவாழ்வாம்.

50 பொது வணக்கம்.

கலித்துறை.

வேதமதைப் பிரமனுக்கு ஈயந்தவனு மெனதுகுருவேல் கொண்டோனும்
மாதாவாமம்பிகையினருளாலுமிக் கீதம்வழுத்தலல்லால்
பூதலத்தில்யானு மொருபுலவனல்ல பொருளறியேன் பொறுப்பீர்குற்றம்
வாதகற்றுமென்தாயே ஆதிபராசக்தியுனை வணங்கினேனே.

51

விருத்தம்.

ஆழியாங்கடலின்மீது அசுத்தநீர் சேர்ந்ததாலல்
தாழ்வெனத்தள்ளிடாதத் தன்மைபோல் சிறுவன் சொன்ன
சீலமாங் கீதந்தன்னிற் செப்பிடுங் குற்றம் யாவும்
சாலவே பொருத்தாக்ஷித்தாளுவதுலகந்தானே.

சற்குரு வாழ்க.

அருட்குமர பஜனுமிர்தம்.

முற்றுபெற்றது.

இத்தமிழீந்தோனெவனோ அவனருள்
பக்தியாற் பலநூல் பாரினில் வருமே.

சுபமங்களம்! சுபமங்களம்!! சுபமங்களம்!!!

Printed by
N. S. Perera, Manager, "Robert" Press,
44, Green Street, Colombo.
and Edited by M. S. Athimoolan,
Wewelketiya, Hapugastenne Group, Ratnapura.